





We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## ஏப்ரல் - 2019

We Are Here..!! To Guide You..!!







# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## ஏப்ரல் - 12.04.2019


Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- நியமனங்கள்
- பொருளாதார நிகழ்வுகள்
- முக்கிய தினங்கள்










## இந்திய நிகழ்வுகள்

- **கங்லா தோங்பி போர் நினைவு தினம் - ஏப்ரல் 7, 1944**
    - 2019ம் ஆண்டு ஏப்ரல் 7ம் நாள் கங்லா தோங்பி போரின் **(Kangla Thogbi War)** 75வது ஆண்டு நினைவு தினமானது இராணுவப் போர் தடவாளப் படையினால் மணிப்பூரின் இம்பாலுக்கு அருகில் உள்ள கங்லா தோங்பி போர் நினைவகத்தில் அனுசரிக்கப்பட்டது.
    - இந்தப் போரானது இரண்டாம் உலகப் போரில் 1944ல் ஜப்பானின் பர்மாவை நோக்கிய இலக்கின் மீதான திருப்பு முனையில் ஏற்பட்டது. இதே நேரத்தில் நாகலாந்தில் ஹோகிமா போர் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

- **CRPF (Central Reserve Police Force)** – வீரர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு அரசின் அனைத்து நல உதவிகள் கிடைத்திட வழிசெய்யும் வகையில், **"CRPF Veer Parivar"** என்ற மொபைல் செயலியை இந்திய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அறிமுகப்படுத்தியுள்ளார்.

## உலக நிகழ்வுகள்

- உலகின் முதல் "**மாசு கட்டுப்பாட்டு கட்டண மண்டலமாக**" பிரிட்டிஷ் தலைநகரம் லண்டன் உருவெடுத்துள்ளது. **(Pollution Change Zone)**
    - லண்டனில், அதிகமான வாகனங்களில் வெளியேறும் தீங்கு விளைவிக்கும் நைட்ரஜன் ஆக்ஸைடு உமிழ்வை குறைப்பதற்காக, **"ULEZ"** என்ற திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
    - **ULEZ – Ultra Less Emission Zone**

## விளையாட்டு நிகழ்வுகள்

- இங்கிலாந்தைச் சேர்ந்த "**விஸ்டன்**" பத்திரிக்கையானது 2018ம் ஆண்டுக்கான உலகின் சிறந்த முன்னணி கிரிக்கெட் வீரர்/வீராங்கனை விருதை வழங்கியுள்ளது.
    - **உலகின் சிறந்த முன்னணி வீரர் விருது இந்தியாவின் விராட் ஹோலிக்கு வழங்கப்பட்டது.**

- சிறந்த முன்னணி டி-20 வீரர் விருது ஆப்கானிஸ்தானின் ரஷித் கான் பெற்றுள்ளார்.
- சிறந்த முன்னணி வீராங்கனை விருது இந்தியாவின் ஷ்மிருதி மந்தனா-விற்கு வழங்கப்பட்டது.

## நியமனங்கள்

- தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையராக இரா.பழனிசாமி என்பவர் பொறுப்பேற்றுள்ளார். இதற்கு முன் இருந்த மாலிக் பெரோஷ்கான் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து இவர் நியமிக்கப்பட்டுள்ளது.
- குறிப்பு:
  - தமிழக தேர்தல் அதிகாரியாக (Electro Officer) சத்திய விரத சாஹூ என்பவர் உள்ளார்.

## பொருளாதார நிகழ்வுகள்

- உலக வங்கியின் இடப்பெயர்வு மற்றும் வளர்ச்சி என்ற அறிக்கையின்படி, 2019ம் ஆண்டில் வெளிநாட்டில் வாழும் நபர்கள் தனது சொந்த நாட்டிற்கு அனுப்பப்பட்ட பணத்தை பெற்ற நாடுகளில் உலகின் முன்னணி நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.
  - இந்த அறிக்கையில், 2018ம் ஆண்டில் வெளிநாடு வாழ் இந்தியர்கள் மூலம் இந்தியாவிற்கு அன்னிய செலவாணி 79 பில்லியன் டாலர் கிடைத்துள்ளது.

## முக்கிய தினங்கள்

- தேசிய பாதுகாப்பான தாய்மை தினம் - ஏப்ரல் 11 (National Safe Motherhood Day)
  - கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு முறையான சுகாதார மற்றும் மகப்பேறு வசதிகள் பற்றிய விழிப்புணர்விற்காக ஆண்டுதோறும் ஏப்ரல் 11ல் தேசிய பாதுகாப்பான தாய்மை தினம் அனுசரிக்கப்படுகிறது.
  - 2019ன் தேசிய பாதுகாப்பான தாய்மை தினத்தின் மையக்கருத்து – "Midwives for Mothers" என்பதாகும்.